**<u>06.12.2023 அ.வ.எண்.76/2008 பி.வா.சா.1, ஆனந்தன் த/பெ.செல்வராஜ்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

2,3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை பொறுத்து 2004-ம் ஆண்டில் அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என கேட்டால் அப்போது தெரியாது நான் கிரையம் வாங்கியபோது தெரிந்துக்கொண்டேன். பின்னர் 1-ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து வாதியிடம் கிரைய உடன்படிக்கை செய்து கொண்டார் என்றால் அது விவரம் தெரியாது. வாதி கிரைய பத்திரம் எழுதி கொள்ள அழைத்தபோது 1-ம் பிரதிவாதி ஒத்துழைக்கவில்லை என்றும் அதனால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும் சொன்னால் அவ்வாறு பின்னிட்டு தெரிந்துக்கொண்டேன். அந்த அறிவிப்பிற்கு 1-ம் பிரதிவாதி பதில் கொடுத்துள்ளார் என்றும் அந்த பதிலில் என்ன கூறியுள்ளார் என்றும் கேட்டால் அது விவரம் எனக்கு நாளதுவரை தெரியாது. அந்த பதிலில் சொத்தை தனது மனைவிக்கு விற்றுவிட்டதாகவும் வாதியுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்ததை இரத்து செய்துவிட்டதாகவும் 1-ம் பிரதிவாதி தெரிவித்திருந்தார் என்றால் 1-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட அதிகார ஆவணத்தை 2,3 பிரதிவாதிகள் இரத்து செய்துவிட்டனர் அதன் பிறகுதான் 1-ம் பிரதிவாதி தனது மனைவி பெயரில் கிரைய பத்திரம் எழுதினார். அந்த கிரைய பத்திரத்தில் வாதியும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார். 2007-ம் ஆண்டில் 2,3 பிரதிவாதிகளிடம் வழக்கு சொத்தை இரண்டு தவனைகளில் கிரையம் வாங்கினேன். தேதிகள் ஞாபகமில்லை. 2,3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்துள்ளனர். எனது கிரையம் மற்றும் 4-ம் பிரதிவாதியின் கிரையத்திற்கு பிறகு வாதி அறிவிப்புகள் அனுப்பினார் என்பது சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் கொடுத்தேனா என கேட்டால் எனது வழக்கறிஞர் மூலம் கொடுத்தேன். நான் உட்பட யாரும் பதில் அளிக்கவில்லை என்றால் என் வழக்கறிஞரைதான் கேட்க வேண்டும். அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 1-ம் பிரதிவாதி ஒரு நாராயணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்பது உண்மைதான். அந்த சொத்து தற்போதும் நாராயணன் வசம்தான் உள்ளது என்பது உண்மைதான். 2,3 பிரதிவாதிகள் வாதிக்கு அறிவிப்பு கொடுக்காமல் அதிகார ஆவணத்தை இரத்து செய்துவிட்டனர் என்றால் அதுபற்றி அவரிடம்தான் கேட்க வேண்டும். 2,3 பிரதிவாதிகள் எனக்கும் மற்றும் 4-ம் பிரதிவாதிக்கும் மற்றும் நாராயணனுக்கும் கொடுத்த கிரையங்கள் செல்லாது என்றும் அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு என் பெயரில் பட்டா வாங்கி 17 வருடமாக அனுபவிக்கிறேன். கிரையம் வாங்கிய வருடத்திலேயே பட்டாவும் பெற்றுவிட்டேன். எனக்கு வழங்கப்பட்ட பட்டா செல்லாது என்றால் அது சரியல்ல. 1-ம் பிரதிவாதி என் மீது தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. 2,3 பிரதிவாதிகளை மிரட்டி கையெழுத்து பெறப்பட்டதாக நான் கூறும் அத்தகைய பேப்பர்கள் எங்குள்ளது என கேட்டால் அது அவர்களிடம்தான் இருக்க வேண்டும் அவர்கள் சொல்லிதான் அந்த விவரம் எனக்கு தெரியும். இந்த விவரத்தை மூன்றாம் பிரதிவாதி சாட்சியமாக சொல்வாரா என கேட்டால் அவரிடம்தான் கேட்க

வேண்டும். வாதி படிப்பறிவு அற்றவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2,3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதியை ஏமாற்றிவிட்டனர் என்றும் 1-ம் பிரதிவாதி வாதியை ஏமாற்றிவிட்டார் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2,3 பிரதிவாதிகள் பொது அதிகார இரத்து ஆவணத்தில் என்ன காரணம் கூறியுள்ளனர் என கேட்டால் அதுபற்றி கவனிக்கவில்லை. இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோறியுள்ளார் என கேட்டால் அது விவரம் தெரியவில்லை.

**மறு விசாரணை**- இல்லை.